[1969 மார்ச் 25

புதிதாக ஏற்படுத்தப்பட்ட தாலுக்காக்கள்.

***453 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் எத்தனை புதிய தாலுக்காக்கள் ஏற்படுத்தப்பட்டன ?

(இ) அதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1967-68-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் நான்கு புதிய வட்டங்களும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இரண்டு புதிய வட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

(இ) மதுரை மாவட்டத்தில் வட்டங்களைச் சீரமைத்ததால், திங்களொன்றுக்கு ரூ. 378 சம்பளம் பெறும் சிறப்புத் தாசில்தார் பதவி ஒன்றைக் கூடுதலாக ஏற்படுத்தியதன் காரணமாக செலவு மட்டுமே செய்யப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சீரமைத்ததனால் 29-2-1968 தேதி வரையில் ரூ. 10,902·53 செலவாகியுள்ளது.

புலவர் பொ. பொன்னம்பலம் : திருச்சி மாவட்டம் திருமயம் வட்டத்தில் அமைந்திருக்கும் பொன் அமராவதிப் பகுதியைப் பிரித்து அதை வட்டமாகவோ அல்லது துணை வட்டமாகவோ அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக சாத்தியக் கூறான இடங்களில் புது வட்டங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. பொன் அமராவதி அப்படி அமையவேண்டும் என்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அதைப்பற்றி அரசு யோசிக்கும்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : புதுக்கோட்டையை ஒரு மாவட்டமாக்குவதற்கு சில தாலுக்காக்களைச் சேர்த்தால்தான் ஒரு மாவட்டமாக அதை ஆக்கமுடியும் என்று சொல்கிறார்களே அது உண்மையா ? ஒரு மாவட்டமாக்குவதற்கு எவ்வளவு ஜனத்தொகை தேவை என்பதை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புதுக்கோட்டை சமஸ்தானம் இப்போதுதான் ஒரு மாவட்டத்திற்குள்ளே வந்திருக்கிறது. காலப்போக்கில், வரலாற்றுப் போக்கில் சில ஏற்படும். இப்போது இருப்பதுபோல் ஒரு மாவட்டத்திற்குள் அது இருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். சரித்திர பாரம்பரியத்தை அனுசரித்து அதைச் சுற்றியுள்ள இடங்களைச் சேர்த்து அதை ஒரு புது தனி மாவட்டமாக ஆக்கலாம் என்றும் சொல்கிறார்கள். இப்படி இரண்டுவிதக் கருத்துக்கள் உள்ளன. புதுக்கோட்டையை ஒரு தனி மாவட்டமாக ஆக்கலாம் என்பதில் நியாயங்கள் இல்லாமலும் இல்லை. அதை உடனடியாகச் செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே அரசின் தீவிர பரிசீலனையில் இது நெடுநாட்களாக இருந்து கொண்டு வருகிறது.

திரு கொ. இர. ஞானசம்பந்தன் : தஞ்சை மாவட்டத்தில் நாகபட்டினம், நன்னிலம், திருத்துறைப் பூண்டி தாலூக்காக்கள் மிகப் பெரிய தாலூக்காக்களாக இருக்கின்றன. ஆகவே அதைப் பிரித்து வேதாரணியம் தாலூக்கா, கொடவாசல் தாலூகா, திருவாரூர் தாலூகா என்று பிரிக்க சீக்கிரம் உத்தரவிடப்படுமா ? நிர்வாகத்தில் பல கஷ்டங்கள் இருப்பதினால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிழக்கு தஞ்சை, மேற்கு தஞ்சை என்றிருக்கிறது. மேற்கு தஞ்சையை என் உறுப்பினர் வெறுக்கிருர்கள் என்று தெரியவில்லை. கிழக்குத் தஞ்சைக்குள்ளேயே எல்லாக் காரியங்களையும் அடக்கிவிடவேண்டும் என்பதில்லை. நிர்வாகம் இப்போது செம்மையாகத்தான் நடைபெற்று வருகிறது.

திரு. நா. வீராசாமி : இப்போதிருக்கிற தாலூக்காக்கள் எல்லாம் எவ்வளவோ வருடங்களுக்கு முன்னுல் அப்போதிருந்த ஜனத்தொகை, அப்போதிருந்த வருவாய் இவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டவைகளாகும். ஆனுல் இப்போது அப்படி பிரிக்கப்பட்ட வட்டங்களில் ஜனத்தொகை பெருகியிருக்கிறது. வருவாயும் பெருகியிருக்கிறது. இதையெல்லாம் அடிப்படையாக் கொண்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வாலாஜா போன்ற பெரிய வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம் அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் அச்சாணி போன்று, அடித்தளமாக நல்ல முறையில் அமைந்திருக்கிற நிர்வாக இயந்திரம் ரெவின்யூ இலாகா இயந்திரமாகும். வேறு பல இலாக்காக்களும் சமீப காலங்களில் வளர்ந்து முழுமை பெற்றனவே தவிர கட்டுக்கோப்பான அமைப்பைக் கொண்டுள்ள இலாகா ரெவின்யூ இலாகா தான். ஆகவே, அப்படிப்பட்ட ரெவின்யூ இலாகாவில் செய்யப்படுகிற மாற்றங்கள் அல்லது புதுத் திருப்பங்கள் இவை மூல அடித்தளத்திற்கு ஊறு நேராதபடி செய்யப்படவேண்டும்.

பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகம்.

*454 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பென்னலூர்ப்பேட்டை துணை வட்ட அலுவலகத்தை ஊத்துக்கோட்டை அல்லது பெரியபாளையத்திற்கு மாற்றும் திட்டம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) இது பற்றி செங்கை மாவட்ட வளர்ச்சி மன்றம் அனுப்பிய பரிந்துரையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) பென்னலூர்ப்பேட்டை துணை வட்டத்தின் தலைமையிடத்தை வேறிடத்திற்கு மாற்றுவதற்குச் செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றம் செய்த பரிவுரை அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு. கே. விநயகம் : இந்த சப்-தாலூகா விஷயத்தில் தாலூக்கா ஆபீஸில்தான் ட்ரெஷரி இருக்கிறது. ஒரு தாசில்தார் முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறுர். சப்-தாலூக்கா விஷயத்தில் ஒரு இன்டிபென்டன்ட் டெப்டி தாசில்தாரைப் போடுகிறுர்கள். அல்லது ஒரு டெப்டி தாசில்தாரைப் போடுகிறுர்கள். அங்கு சப்-ட்ரெஷரி வசதியில்லாமல் போவதால் அந்தப் பகுதி மக்கள் பணம் ட்ரெஷரியில் செலுத்தவேண்டுமென்றுல் தாலூக்கா ஹெட்க்வார்டர்ஸ்க்கு வரவேண்டிய கஷ்டம் இருப்பதால் சப்-தாலூக்கா என்ற காட்டிகரியையே எடுத்துவிட்டு முழு தாலூக்காவாக ஆக்குவதற்கு என்ன கஷ்டமிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழககன் : அது ஒரு நாளில் வரைபடம் வரைவது போன்ற காரியம் அல்ல. கூடுமான வரையில் சப் தாலூக்காக்களை இன்டிபென்டன்ட் சப் தாலூக்காக்களாகவும், முழுமையான தாலூக்காகள் ஆக்கவும் பல்வேறு வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.